# MEANING OF KHALIFATULLAH

# கலீ:.பத்துல்லாஹ்என்ற சொல்லின் ஒரு விளக்கம்

## வெள்ளிக்கிழமை குத்துபா - 25-05-2012

## FRIDAY SERMON

## HAZRAT MUNIR AHMAD AZIM (A)

ஹஸ்ரத்முனீர் அஹ்மது அஸீம் (அ) அவர்கள் தனது தோழமைக் கூட்டத்திற்கு சமாதான வாழ்த்துக்களை தெரிவித்து கொண்டும், இந்தியா டினிஹாட், இட்டுபோஹோ என்ற நாடுகளை நினைவூட்டிக்கொண்டும் தஸ்கூதும் தஆவ்வஸும் சூராபாத்திஹாவும் ஓதிய பிறகு இவ்வாறு கூறினார்.

இன்று தான் கலீபத்துல்லாஹ் என்ற விஷயத்தை குறித்து உரையாற்றுவேன். இன்ஷா அல்லாஹ் வருகின்ற வெள்ளிக்கிழமை நான் கடந்த வாரத்தின் சொற்பொழிவை தொடர்ந்து விளக்குவேன்.

அல்லாஹ்வுடன் நேரடியாக தொடர்புபடுத்தியோ அல்லது கடந்த காலங்களில் தோன்றிய நபிமார்களுடன் தொடர்புபடுத்தியோ கலீபத்துல்லாஹ் என்ற சொல்லை விளக்கி கூறலாம் என்பதாகும். அல்லாஹ்வின் கட்டளையின்படியே பூமியில் கலீபத்துல்லாஹ் படைக்கப்படுகின்றார். கலீபத்துல்லாஹ் உண்மையில் அல்லாஹ்வின் பிரதிநிதியாவார், அல்லது அவனது நீதியை நிலைநாட்டும் ஆட்சியாளராவார். ஹஸ்ரத் ஆதம் நபி(அ) மை கலீபத்துல்லாஹ் என்றே அழைக்கப்படுகின்றார். கலீபத்துல்லாஹ் என்ற சொல்லின் பதவியும் அதிகாரமும் சிறப்பும் புகழும் ஹஸ்ரத் முஹமது(ஸ) வில் முழுமைப்பெற்றது. அதுவே காத்தமுன்னபீயின் என்பதின் பொருளுமாகும். இதுவே கலீபத்துல்லாஹ் என்ற சொல்லைப்பற்றிய ஒரு விளக்கம் இரண்டாவதாக இவ்வாறாகும். இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட கலீபத்துல்லாஹ் காலமானபின் அவருடைய தோழமைக் கூட்டத்தில் நின்று கிலாபத் என்ற ஆட்சி நடைமுறையில் வரும். மரணமடைந்த நபியின் அல்லது கலீபத்துல்லாஹ்வுக்கு பின் மக்களால் தேர்ந்தெடுக்கின்ற நபரையும் கலீபா என்று அழைக்கப்படுகின்றன. இறைவனின் கிலாபத்தை தொடர்ந்து நடத்தி செல்ல அவர் முன்வருகின்றார். அவர் ஏது நபியின் அல்லது கலீபத்துல்லாஹ்வின் போதனைகளைப் பின் பற்றுகின்றாரோ அதில் அவர் பரிபூரணமாக நிலைத்து நிற்க வேண்டும். இதுவே ஒரு கலீபா இறைவனுடைய கிலாபத்தை ஏற்றெடுத்ததின் பொருளுமாகும்.

முற்றிலும் இருளில் முழுகி சீரழிந்த மக்கள் வாழும் இம்மண்ணில் இறைவன் அவனது அருள்களை இறக்கி கொண்டிருக்கின்றான். அதற்கு தகுந்த சான்றே முஹமது (ஸ) வின் உண்மையான கலீபாவும் கடந்த நூற்றாண்டின் இமாம், மஹ்தி மஸீஹுமாக ஹஸ்ரத் மிர்ஸாகுலாம் அஹ்மது(அ) மும் இந்த நூற்றாண்டில் இந்த எளியவனும் அவதாரமெடுத்தது. அல்லாஹ், இந்த எளியவனை இந்நூற்றாண்டின் முஹைதீனும் (மார்க்கத்திற்கு மறு வாழ்வு கொடுப்பவர்) கலீபத்துல்லாஹும் (அல்லாஹ்வின் கலீபா) முஜத்தீதும் (சீர்த்திருத்தாளர்) ஆக அனுப்பி வைத்திருக்கின்றான். அல்ஹம்துலில்லாஹ்.

அனைத்து முஸ்லீம்களுக்கும் மத்தியில் ஒற்றுமை ஏற்படுத்த வேண்டும் என்ற உயரிய லட்சியத்தோடு மட்டுமே நான் வந்திருக்கின்றேன். இறைவனால் படைக்கப்பட்ட அல்லது தீர்மானிக்கப்பட்ட கலீபத்துல்லாஹ்வை ஏற்றுக்கொள்பவர்களில் மட்டுமே இவ்வொற்றுமை வந்தடையும். அல்லாஹ்வேயின்றி மனிதர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற கலீபாவையோ அல்லது இறைவனின் உதவியின்றி சுயவிருப்பம் காரணமாக ஆட்சி நடத்த கலீபாவின் அரியணையை இறுகபிடிக்க நினைக்கும் நபர்களையோ அல்ல. ஏற்றுக்கொள்ள வேண்டியது. அல்லாஹ்வினால் நிச்சயிக்கப்பட்ட ஒரு தலைமையை (கலீபத்துல்லாஹ்) நிராகரிப்பதும் கலீபத்துல்லாஹ்வை உதாசீனப்படுத்துவதும் தொடர்ந்து சென்றால் முஸ்லீம்கள் மத்தியில் எவ்வித ஒற்றுமையும் ஏற்படுவதில்லை. காலத்தொலைவில், மிக நிதானத்திலென்றாலும் இறைவனால் நியமிக்கப்பட்ட கலீபத்துல்லாஹ்வை ஏற்றுக்கொண்டோர்களின் எண்ணிக்கையில் வளர்ச்சி ஏற்படும். அது மெல்லமெல்ல பரவி கொண்டே இருக்கும். அதேகணம் கலீபத்துல்லாஹ்வை நிராகரிப்போர்களின் எண்ணிக்கை சிறுகூட்டமாக சுருங்கிபோகும். இறுதியில் ஒரு ஏக இறைகொள்கை அமைப்பு உருவாகும். அதில் முன்கால எல்லா முஸ்லீம்களும் உட்படுவார்கள். இன்ஷா அல்லாஹ்.

கலீபத்துல்லாஹ் என்றால் இம்மண்ணில் இறைவனின் பிரதிநிதியாக இறைவனே தீர்மானிக்கும் நபர் ஆவார். ஒவ்வொரு குறிப்பிட்ட காலத்திற்கும் இறைவனால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற நபர்களை ஒப்பிட்டு அதன் பொருளில் மாற்றம் வரும். திருமறைக்கூற்றின்படி இறைவன் எந்த நபியில் அவனது அருளை ஊதினானோ அவரே மனிதகர்களில் நின்றுள்ள முதல் கலீபத்துல்லாஹ். இறையருள் இறக்கப்படுவதென்பதும், இறைவெளிபாடுகள் இறக்கப்படுவதென்பதும் இரண்டுக்கும் ஒரே பொருளாகும். இறைவன் இறக்குகின்ற தூய வெளிபாடுகளில் நின்றே அல்லாஹ்வின் சீடனான கலீபத்துல்லாஹ் உருவாகின்றார். அல்லாஹ்வின் பிரதிநிதித்துவம் நிலைநிறுத்துவதற்கு இறைவனே தேர்ந்தெடுக்கின்ற கலீபத்துல்லாஹ் என்ற

நிலையில் இந்த கடமையில் முழுமையாக நீதி காட்டவேண்டும். தனக்கு கிடைக்கின்ற தூய வெளிபாடுகளை அதற்கு எவ்வித கேடும் விளைவிக்காத வகையில் கலீபத்துல்லாஹ் அதை பரிபூரணமாக வெளிப்படுத்த வேண்டும். எவரை தனது பிரதிநிதியாக நியமிக்க வேண்டும் என்பது அல்லாஹ்வின் கரங்களில் மட்டும் அமைந்த விஷயமே ஆகும்.

இந்த பாரினில் அல்லாஹ்வின் முதல் கலீபத்துல்லாஹ்வின் வருகைக்கு பிறகு அவதரித்துள்ள அனைத்து நபிமார்களும் இறைவனின் கலீபத்துல்லாக்களே ஆவார்கள். ஆனால் அவர்களுக்கு கிடைத்த இறையறிவிப்பின்படி ஒவ்வொரு நபருடையவும் கடமை பலதரப்பட்டவையாகும். ஒரு சில நபிமார்கள் சில சமுதாயங்களுக்கு மட்டுமாக இறைவனின் பிரதிநிதியாத அனுப்பப்பட்டிருந்தார்கள். மற்றும் சிலர் சில வர்க்கத்திற்காகவோ நாட்டிற்காகவோ பிரதிநிதியாக தோன்றியிருந்தார்கள். இஸ்ரேயல் நபிமார்கள் இதற்கு எடுத்துகாட்டாவார்கள். ஆனால் இறுதியில் வந்த முழுமை வாய்ந்த தர்மச்சக்கிரவர்த்தியான கலீபத்துல்லாஹ் ஹஸ்ரத் முஹமது (ஸ) அவர்கள் இம்முழு உலகிற்குமாக அவதாரமெடுத்த பிரதிநிதி என்று நாம் நம்புகின்றோம். தூயதூதர் நபி(ஸ) வை பற்றி அல்லாஹ் இவ்வாறு தெரிவிக்கின்றான்.

**நான் உன்னை இவ்வுலகிற்கு ஒரு அருளாக மட்டுமே அனுப்பியிருக்கிறேன்** (21:108) முழு உலகிற்குமாக அவதரித்த முஹமது(ஸ) வின் தோற்றத்தின் மேன்மையை எடுத்துரைக்கும் இத்தகைய வசனங்கள் திருமறையில் பல இடங்களிலும் காணலாம்.

ஒரு நபியின் மரணத்திற்கு பிறகு அவரது கடமைகளை மற்றொருவர் ஏற்றெடுக்கின்றார். அன்னபர் அவருடைய தோழரும் அவருக்கு கீழ் அதிகாரமுடையவரும் ஆவார். அந்த நபரையும் கலீபா என்றே அழைக்கப்படுகின்றன. ஹஸ்ரத் அபுபக்கர்(ர) ஹஸ்ரத் உமர் (ர) ஹஸ்ரத் உஸ்மான்(ர) ஹஸ்ரத் அலி(ர) என்பவர்களை போன்று. தங்களுடைய கடமைகளின்அதிகார வரம்பில் நிலை நிற்கும் காலம் வரையில் அவர்களே கலீபாக்கள் ஆவார். அவர்கள் வரம்பு மீறினால் கலீபா என்ற பதவிக்கு உகந்தவர் அல்ல. ஆனால் அல்லாஹ்வின் நபிமார்களும் அவர்கள் ஒப்படைத்து சென்ற இதுவரையிலுமுள்ள கலீபாக்கள் நேர்மையானவர்களும் நீதிமான்களும் ஆயிருந்தார்கள். அவர்கள் ஒரு போதும் மார்க்கத்திற்கு பங்கம் விளைவிக்கவில்லை. ஆனால் அதாவது அப்படி நேர்ந்தால் (ஒரு நபியின் மரணத்திற்கு பிறகு தேர்வு செய்கின்ற ஒரு கலீபா, அல்லாஹ்வுடையவும் அவனது நபியுடையவும் போதனைகளுக்கு மாறாக செயல்பட்டால்) உடனே அல்லாஹ் அவன் தேர்ந்தெடுக்கின்ற கலீபத்துல்லாஹ்வை எழுப்புகின்றான். இது உண்மையான இறைபோதனைகளை அதிக ஒளிமயமாக்குவதற்கும் அதனுடைய

ஒளி இழுக்காமல் இருப்பதற்குமாகும்.

அவ்வாறு ஒரு நபியின் கடமைகளை நிலைநாட்டுவதற்காக கலீபத்துல்லாஹ் அவதாரமெடுக்கின்றார். கடினமாக உழைத்து இறைஞான தரிசனத்தின் உதவியோடு தன்னுடைய வேலைகளையும் கடமைகளையும் நிறைவேற்றுகின்றன. இறைவனால் தங்களில் சுமத்தப்பட்ட கடமைகள் அதாவது அவர் எந்த வேலைக்காக நியமிக்கப்பட்டாரோ அதை செய்து முடிப்பதில் கலீபத்துல்லாஹ் வெற்றியை காண்பார். இறைவன் அவனுடைய கலீபத்துல்லாஹ்வின்பால் அருள்களை இறக்கி அவரை உடலளவிலும், மனதளவிலும் பலப்படுத்துகின்றான். உதாரணமாக நமது இக்காலகட்டத்தில் என்ன நேர்ந்ததென்று பார்ப்போம். அல்லாஹ் அவனது திருமறையில் சூறாஅன்னிஸாவில் ஏழுபதாம் வசனத்தில் கூறியிருப்பதைப் போன்றே, அவனுடைய பரிபூரணமான நபியும் தூதருமாகிய ஹஸ்ரத் முஹமது (ஸ) வின் தோழர்களிலிருந்து நபிமார்களை தோற்றுவிப்பான்.

மனிதகுலத்தின் உத்தமபுத்திரன் ஹஸ்ரத் முஹமது(ஸ) காலமாகி 1300 வருடங்களுக்கு பிறகு அதாவது குலபா உர்ராஷிதீனுக்கு பின் முஸ்லீம் சமுதாயம் பிளைவுபட்டு சிதறிப்போனது. அல்லாஹ் ஏற்படுத்திய சட்டதிட்டங்களின் பால் மக்களை ஒன்று திரட்டி ஒருமைபடுத்த போதுமான திறமை வாய்ந்த ஒரு ஆத்மீக தலைவர் இல்லாமல் முஸ்லீம்கள் கைவிடப்பட்டன. அதன் காரணமாக இறைவன் ஹஸ்ரத் முஹமது (ஸ) வின் ஆத்மீக புதல்வனாகவும் வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும் கடந்த நூற்றாண்டின் கலீபத்துல்லாஹ் ஆகவும் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அ) மை அனுப்பி வைத்தான்.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் அஹ்மது (அ) காட்டித்தந்த பாதையை பின் தொடர்ந்து மகத்தான வளர்ச்சியை எட்டுவதற்காக அவருடைய மரணத்திற்கு பிறகு கலீபாக்களை தேர்ந்தெடுக்கப்பட்டன. அக்கலீபாக்களில் அருள்களால் நிறைக்கப்பட்ட ஒரு நபர் இருந்தார். அக்காலத்தின் கலீபாவும் சீர்த்திருத்தாளரும் அருள் நிறைந்த புதல்வனும் என்று அல்லாஹ் அளித்த வாக்குறுதி அன்னாரில் நிறைவேறியது. அதுவே அவருடைய சிறப்புமாகும். அதற்கு பின் நாலாவது கலீபாவின் வருகையுடன் நினைத்த அளவிற்கான ஆத்மீக மாற்றமோ வளர்ச்சியோ ஏற்படவில்லை. மட்டுமின்றி அவர்களின் தலைமையில் கீழ் வாழ்ந்திருந்த நபியின் (அஹ்மது(அ)) தோழர்கள் சிதறப்படவும் மார்க்கத்திற்கு மாறாக செயல்படவும் செய்தனர். இவ்வுலக ஆசைகளின் மேல் தாகமுடையவர்களாக மாறிய அம்மக்களின் உள்ளத்தில் கலீபா வணக்கத்துக்குரிய ஒரு சிலையாக பரிணமித்தது, நம்பிக்கையாளர்கள் இவ்வுலக ஈன செயல்களில் தலைசாய்க்கின்ற அவலநிலையை கண்ட அல்லாஹ், அதே நபியின் அல்லது கலீபத்துல்லாஹ்வின் தோழமைக் கூட்டத்திலிருந்தே மற்றொரு

கலீபத்துல்லாஹ்வை ஏற்படுத்தினான். இஸ்லாமுக்கு மாறுபட்ட செயல்களை தடுப்பதற்கும், தோழர்கள் மட்டுமல்லாமல் மனித குலம் அனைத்தும் பின்தொடருகின்ற அநாகரிக நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கும், லௌகீக சுகங்களையும், கலீபாவையும் வணங்குவதற்கு பதிலாக எல்லா உள்ளங்களிலும் அல்லாஹ்வின் ஏகத்துவ ஒளி மட்டும் நிறைப்பதற்குமாக இறைவனே அவனது பிரதிநிதியை அனுப்பி வைத்தான்.

தற்சமயம் இவ்விஷயத்தை நான் நிறைவுப்படுத்துகின்றேன். கிலாபத்தின் முக்கியமான நிகழ்ச்சிகளிலும் மற்று நமது ஒன்று கூடல்களிலும் இவ்விஷயத்தை குறித்து நான் உரையாற்றுவேன். இன்ஷா அல்லாஹ் கலீபத்துல்லாஹ் என்ற சொல்லின் கருத்தையும் அதன் மேன்மையையும் பற்றி அறிந்து கொள்ள விரும்புகின்ற அனைவருக்கும் அல்லாஹ் அருள் புரிவானாக. இக்காலகட்டத்தின் கலீபத்துல்லாஹ்வை ஏற்றுக்கொள்வதின் கட்டாயத்தைக் குறித்து புரிந்து கொள்ள மானிடகுலத்திற்கு அல்லாஹ்க்கு வழிவகுப்பானாக. அல்லாஹ்வின் செயல்முறையை தடுக்க எவராலும் இயலாது. ஒரு ஆட்சி அமைப்பில் ஊழல்கள் ஊற்றெடுக்கும் போது அதை தடுத்து நிறுத்துவதற்காக இறைவன் புது முறையை கையாளுகின்றான். அப்புதிய மாற்றங்களின் அவன் திருப்தி அடைகின்றான். அம்மாற்றம் இஸ்லாமுக்கு அருள் நிறைந்ததாகயிருக்கும். என்மீது கட்டளை இட்டபடி இந்த தீனை வளர்ச்சியின் பாதையில் எட்டவைக்க நான் செய்கின்ற எல்லாவித முயற்சிகளையும் இறைவன் ஏற்றுக் கொள்வானாக. ஒரு ஜமாஅத் என்ற நிலையில் நமக்கு பெரும் சோதனைகளை சந்திக்கநேரும். ஆனால் இறுதியில் இறைவனும் அவனது கலீபத்துல்லாஹ்வும். சஹிஹில் இஸ்லாமும் வெற்றியடையும் என்பதில் சந்தேகமில்லை. நம்பிக்கையாளர்களும் அவநம்பிக்கையாளர்களும் தரிசிக்கும் அளவில் இஸ்லாம் வெற்றியை எட்டும். அல்லாஹ்வின் புகழும் மேன்மையும் வெளிப்படும். இன்ஷா அல்லாஹ். ஆமென்.

Issued by R. Jamaludin Raother Amir
Jamaat UI-SahihAl Islam, Kerala (Regd) India.
Email: jamal.raother@gmail.com
Web:www.jamaat-ul-sahih-al-islam.com

Translated by
Abdhul Sudheer

**Phone: 09789180817, 09447001832**